**பிரதான விடயங்களடங்கிய ஆவணம் (KFD) துரித வரைவு**
**மேர்சன்ட் பேங்க் ஒ.்.ப் ஸ்ரீ லங்கா அன்ட் பினான்ஸ் பீஎல்சி**

**1. பொருள் / சேவை – துரித வரைவு**

இந்த வசதியானது பிரதானமாக வர்த்தக நோக்கங்களுக்காக அவர்களது தொழிற்படு மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வழங்கப்படுகின்றது. குறித்த காலப்பகுதியில் வாடிக்கையாளர் அம்மாதத்திற்கு செலுத்த வேண்டிய வட்டியை செலுத்த வேண்டியதுடன் மூலதனத்தையும் உரிய காலப்பகுதிக்குள் செலுத்திமுடிக்க வேண்டும். இது ஒரு பாதுகாப்பான வசதியாகும். பிணையாக ஒரு வாகனம் பெற்றுக் கொள்ளப்படும்.

**2. இதன் முக்கிய அம்சங்களும் நன்மைகளும்**

அ) கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்
ஆ) குறைந்தபட்ச கடன் வழங்கும் காலம்
இ) 1 வருடம் வரை மீளச் செலுத்தும் காலம்
ஈ) விரைவான வாடிக்கையாளர் சேவை

**3. தகைமை: வாடிக்கையாளர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.**

அ) 18 வயதிற்கு மேற்பட்ட மற்றும் 65 வயதிற்குக் குறைந்த இலங்கைப் பிரஜையாக இருத்தல்.
ஆ) சிறிய அல்லது நடுத்தரளவிலான வர்த்தகராக இருத்தல் அல்லது ஒரு தொழிலில் இருத்தல்.
இ) ஏற்றுக் கொள்ளக்கூடிய / உறுதிப்படுத்தக்கூடிய மீளச் செலுத்தும் இயலுமை.
ஈ) தெளிவான கடந்த கொடுகடன் அறிக்கை (திருப்திகரமான CRIB அறிக்கை)
உ) கடன் பெறுவதற்கான நோக்கம் சட்டபூர்வமாக இருத்தல்.

**4. வட்டி வீதங்கள் மற்றும் ஏனைய கட்டணங்கள்**

**4.1 வட்டி வீதங்கள்**

சொத்துக்களுக்கும் பொறுப்புக்களுக்குமான குழுவினால் (ALCO Committee) காலத்திற்குக் காலம் சந்தை நிபந்தனைகளுக்கமைவாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கமைய, வட்டி வீதங்கள் தீர்மானிக்கப்படும்.

**4.2 பிற கட்டணங்கள்**

**4.2.1 ஆவணங்களுக்கான கட்டணங்கள்**

| | |
|---|---|
| 1.00 மில்லியன் ரூபாய் வரை | 7,500.00 |
| 1.00 மில்லியன் ரூபாய் தொடக்கம் 5.00 மில்லியன் ரூபாய் வரை | 12,500.00 |
| 5.00 மில்லியன் ரூபாய் தொடக்கம் 12.00 மில்லியன் ரூபாய் வரை | 27,500.00 |
| 12.50 மில்லியன் ரூபாய் தொடக்கம் 15.00 மில்லியன் ரூபாய் வரை | 35,000.00 |
| ரூ.15.0 மில்லியனுக்கும் அதிகமான வசதிகள் | இது கடன் குழுவால் தீர்மானிக்கப்படுகிறது |

**4.2.2. கட்டணங்கள் - அசையும் சொத்துக்களுக்கு வழங்கப்பட்ட வசதிகள்**

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட மோ.வா.போ.திணைக்கள (RMV/DMT) வாகனப் பதிவுக் கட்டணங்கள் அறவிடப்படும்.

**4.2.3 மாதாந்த தவணைக் கட்டணங்களைச் செலுத்தாமை அல்லது தாமதமான கொடுப்பனவிற்கான அபராத வட்டி (ஏதேனும் இருந்தால்)**

உரிய திகதியில் கொடுப்பனவு செய்யப்படாத தவணைக் கட்டணங்கள் தொடர்பில் தாமதமான காலத்திற்கு மூன்று சதவீத தாமதக் கட்டணம் (3%) அறவிடப்படும்.

**4.2.4 வழங்கப்பட்ட வசதிகளை முன்னரே கொடுப்பனவு செய்து தீர்த்தல்:**

கடன் பெற்றவர் அதனை முதிர்ச்சி காலத்திற்கு முன்னரே செலுத்தும்போது, எதிர்காலத்தில் அத்தகைய வசதிகளுக்கு சலுகையொன்றை வழங்குதலானது, MBSLஇன் தனிப்பட்ட விருப்பின்பேரில் அமையும்.

**4.2.5 பொருத்தமான பிற கட்டணங்கள்**

| இல. | கட்டணங்களின் விபரங்கள் | கட்டணங்கள் (LKR) |
|---|---|---|
| 1 | மீதியை உறுதிப்படுத்துதல் | 1,000.00 |
| 2 | உறுதி மற்றும் வரைபடத்தின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி | 750.00 |
| 3 | நிலுவைகள் இல்லையென்பதற்கான கடிதம் | 250.00 |
| 4 | வாடிக்கையாளரது மீளச் செலுத்தும் வரலாறு | 250.00 |
| 5 | நகல் அழித்தல் கடிதங்கள் அனைத்து வாகன வகுப்புக்கள் | 2000.00 |
| 6 | ஆட்சேபனையில்லை என்பதற்கான கடிதம் | 1,000.00 |
| 7 | மீதியை உறுதிப்படுத்துதல் | 1,000.00 |
| 8 | தீர்ப்பனவு கடிதங்கள் | 750.00 |
| 9 | கடன் வழங்குபவர்கள் மற்றும் வாங்குபவர்களுக்கான பட்டியல்கள் | 1500.00 |
| 10 | காசோலை திரும்பல் கட்டணங்கள் | 2,500.00 |
| 11 | காசோலை திரும்பல்கள் - காசோலை வரைபவரால் கொடுப்பனவுகள் நிறுத்தப்படுதல். | 5,000.00 |
| 12 | விடுவிக்கும் உறுதியை தயாரிப்பதற்கும் செயல்படுத்துவதற்குமான சட்டக் கட்டணம் (தொலைந்துள்ளது) | 7,500.00 |

**5.** பெறவேண்டிய பாதுகாப்புப் பத்திரம் மற்றும் வழங்கப்படவேண்டிய வெளிப்படுத்தல்கள்

- பணம் மற்றும் / அல்லது கேள்வி / கால வைப்பு
  முதிர்ச்சியின்போது வட்டிக் கொடுப்பனவு செய்கின்ற வைப்பு எனின் வைப்பில் 100% வரை

- அசையாச் சொத்துக்கள்
  வங்கி குழும மதிப்பீட்டாளரால் வழங்கப்பட்டுள்ள சொத்தின் கட்டாய விற்பனை பெறுமதியின் 75% வரை

- அசையும் சொத்துக்கள்
  குழும மதிப்பீட்டாளரால் வழங்கப்பட்ட கட்டாய விற்பனை பெறுமதியின் 70% வரை

- பிரித்தெடுக்கப்பட்ட பங்குகள்
  சந்தைப் பெறுமதியின் 200% வரை

- அழியாத கையிருப்புகள்
  சந்தைப் பெறுமதியின் 200% வரை

**6. பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள்**

- சாத்தியத்தன்மையுள்ள அனைத்து வாடிக்கையாளர்களும் அருகிலுள்ள கிளைக்கு வரவழைக்கப்பட்டு, அவர்களது தேவைப்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்படும்.
- கலந்துரையாடலின் பின்னர், வாடிக்கையாளரின் தேவைக்கேற்ப அதனை மதிப்பீடு செய்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- அங்கீகரிக்கப்பட்ட DOAஇன் அடிப்படையில் அனுமதி பெற்றுக் கொள்ளப்படும்.

**7. தேவைப்படும் ஆவணங்கள்**

**7.1 தனிப்பட்ட வாடிக்கையாளர்கள்**

- i. சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் / சொத்து வெளிப்படுத்துகை படிவம்
- ii. தேசிய அடையாள அட்டை
- iii. கொடுப்பனவு செய்யப்பட்ட சிட்டை / வதிவிட உறுதிச் சான்றிதழ்
- iv. கடந்த 6 மாதங்களுக்கான வங்கிக் கூற்றுக்கள் (தனிப்பட்ட மற்றும் வியாபார)
- v. காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் / வருமான செலவுக் கூற்றுக்கள்
- vi. CRIB அறிக்கைகள் (தனிப்பட்ட மற்றும் வியாபாரம்)
- vii. வியாபாரப் பதிவுச் சான்றிதழ் (இருந்தால்)
- viii. பிற வருமானத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்
-

**7.2 நிறுவனரீதியான வாடிக்கையாளர்கள்**

**வரையறுக்கப்பட்ட பொறுப்பு கம்பனிகள் / மேற்கோள் காட்டப்பட்ட கம்பனிகள்**

i. கூட்டிணைப்புச் சான்றிதழ்
ii. அமைப்பு அகவிதி
iii. படிவம் 1, புதிய படிவம் 13, படிவம் 15, படிவம் 20 ஆகியவற்றின் பிரதிகள், வரி செலுத்தியதற்கான ரசீதுகள் / வருமான வரி (புதிய)
iv. பணிப்பாளர் சபைத் தீர்மானங்கள் / குழுத்தீர்மானங்கள்
v. கடந்த மூன்று வருடங்களுக்கான கணக்காய்வு அறிக்கைகள்
vi. நடப்பு வருடத்திற்கான முகாமைத்துவத்தின் கணக்குகள்/ காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள்
vii. கடந்த 6 மாத வங்கிக் கூற்றுக்கள்
viii. CRIB அறிக்கைகள் (வியாபாரம் / பணிப்பாளர்கள்)
ix. பிற தேவையான ஆவணங்கள்

**7.3 அசையும் சொத்துக்களுக்கான பாதுகாப்பு**

- பதிவு செய்யப்பட்ட சான்றிதழின் மூலப் பிரதி
- வாகனத்தின் முற்றுமுழுதான உரிமை
  - விலை மதிப்பீட்டு அறிக்கை

**8. பொதுவானவை**

- வியாபாரம் அமைந்துள்ள இடத்தின் புகைப்படங்கள் (பெயர்ப்பலகையுடன்) மற்றும் பாதுகாப்புத்தன்மை
- பரிசோதனை அறிக்கை
- கடன் தேவைக்கான உண்மைத்தன்மை

## 9. பிரதான விதிமுறைகளும் சட்டங்களும்

1. விண்ணப்பதாரர்களுக்கு முன்னறிவிக்காது அல்லது மேர்சன்ட் பேங்க் ஒ.்.ப் ஸ்ரீலங்கா அன்ட் பைனான்ஸ் பீஎல்சி (MBSL) இற்கு தேவைப்படும் எந்த நேரத்திலும் கோரிக்கையின் பேரில கடன் திருப்பிச் செலுத்தப்படும்.

2. 2.1 மற்றும் அதற்கு மேல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் மீது MBSL இலிருந்து எழுத்துமூலமான முன் ஒப்புதல் இல்லாமல் தற்போதைக்கு விண்ணப்பதாரர்கள் அனுபவிக்கும் எந்தவொரு உரிமையையும் குத்தகைக்கு விடவோ, வாடகைக்கு விடவோ அல்லது மாற்றவோ விண்ணப்பதாரர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

3. விண்ணப்பதாரர்கள் சொத்தின் மீது எந்த அடமானம், உரிமை அல்லது பிற சுமைகளை உருவாக்கவோ அல்லது ஆக்கவோ மாட்டார்கள் என்று உறுதியளிக்க வேண்டும்.

4. விண்ணப்பதாரரின் வணிக புத்தகங்களை ஆய்வு செய்ய MBSL க்கு உரிமை உண்டு.

5. விண்ணப்பதாரர்கள் MBSL இன் முன் அனுமதியின்றி பிற நிறுவனங்களிடமிருந்து எந்த கடன் வசதிகளையும் பெறக்கூடாது.

6. MBSL இன் அதிகாரிகள், நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக விண்ணப்பதாரரின் வணிக இடம் அல்லது வசிப்பிடத்திற்குச் செல்ல அதிகாரம் பெற்றவர்களாக உள்ளதுடன், அத்தகைய விஜயங்களுக்கான கட்டணங்கள் விண்ணப்பதாரர்களால் ஏற்கப்படும்.

7. MBSL இனால் தீர்மானிக்கப்பட்டவாங காலத்திற்குக் காலம் விண்ணப்பதாரர் மற்றும்.்.அல்லது உத்தரவாததாரர்களின் வணிக வளாகம் அல்லது வசிப்பிடத்தை வணிகத்தை ஆய்வு செய்வதற்காக அணுகுவதற்கு MBSL க்கு உரிமை உண்டு. வணிகத்தின் இத்தகைய ஆய்வு விண்ணப்பதாரர் மற்றும்; அல்லது சம்பந்தப்பட்ட உத்தரவாததாரர்களுக்கு முன் அறிவிப்புடன் இல்லாமல் அல்லது எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் மேற்கொள்ளப்படலாம்.

8. கடன் ஒப்பந்தத்திலுள்ள ஏனைய எல்லா விதிமுறைகளும் நிபந்தனைகளும் இக்கடிதத்தின் ஒரு ஒரு முக்கிய பகுதியாகவுள்ளது.

9. நிகழ்வில், MBSL ஆனது இங்குள்ள முந்தையவற்றின் அடிப்படையில் வசதியை முடிவுறுத்தினால், விண்ணப்பதாரர்/ கள் மற்றும்/ அல்லது உத்தரவாததாரர்/ கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும், முத்திரைக் கட்டணம், சட்டக் கட்டணம் போன்றவை உட்பட சட்ட நடவடிக்கைகளில் ஏற்படும் அனைத்துச் செலவுகளும் சேர்ந்து MBSL க்கு நிலுவையில் உள்ள பணத்தை மீட்டெடுப்பதற்காக வழங்கப்பட்ட பத்திரங்களை முன்கூட்டியே எடுக்கவும் MBSL க்கு உரிமை உண்டு.

10. வசதியின் பெறுமதிக்கு அடமானக் குறைப்புக் கொள்கை விண்ணப்பதாரர்களால் பெறப்பட்டு MBSL க்கு ஆதரவாக ஒதுக்கப்படும்.

11. ஏற்றுக்கொள்ளக்கூடிய காப்பீட்டாளரிடமிருந்து விண்ணப்பதாரர்கள் வசதி மதிப்பிற்காக தீ காப்புறுதிக் கொள்கையைப் பெறப்பட்டு அது MBSL க்கு ஆதரவாக ஒதுக்கப்பட வேண்டும். மேலும் பெறப்பட்ட அத்தகைய ஒப்பந்தம் ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட்டு MBSL இடம் ஒப்படைக்கப்பட வேண்டும். மேற்கூறப்பட்டவற்றைக் கடைப்பிடிக்கத் தவறினால், MBSL அதைப் புதுப்பிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளதுடன் விண்ணப்பதாரரின் கடன் கணக்கில் பற்று வைக்கப்படும்.

12. மேலே குறிப்பிட்டுள்ள வாகனத்தின் முழு உரிமையாளராக MBSL பதிவு செய்யப்படுவதுடன் MBSL க்கு தேவைப்படும் போது பதிவு செய்யப்பட்ட க்கு மாற்றப்படும். விண்ணப்பதாரருக்கு வாகனத்தை வைத்திருக்க உரிமை உண்டு ஆனால் கோரும் போது MBSL இற்கு உடைமை ஒப்படைக்க வேண்டும். MBSL ஆனது எந்த நேரத்திலோ அல்லது இடத்திலோ மேற்படி வாகனத்தை தனக்குத் தேவையானதாகக் கருதும் போதும் அதனை உடைமை கொள்ளக் கூடியதாகவிருப்பதுடன், தேவைப்படும் போதெல்லாம் MBSL இன் விருப்பத்தின் பேரில் வாகனத்தை அப்புறப்படுத்துவதற்கும் MBSL க்கு உரிமை உண்டு.

13. விரிவான காப்புறுதியை MBSL இன்சூரன்ஸிலிருந்து ஏற்றுக்கொள்ளக்கூடிய காப்புறுதியாளரிடம் இருந்து பெற வேண்டும் மற்றும் ஒப்பந்தமானது MBSL க்கு ஒதுக்கப்பட வேண்டும். மேலும் பெறப்பட்ட அத்தகைய ஒப்பந்தமானது ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட்டு MBSL க்கு ஒப்படைக்கப்பட வேண்டும். மேலே உள்ள MBSL றடீ கடைபிடிக்கத் தவறினால், அதைப் புதுப்பிப்பதற்கான உரிமை உள்ளதுடன் கட்டணங்கள் விண்ணப்பதாரரின் கடன் கணக்கில் பற்று வைக்கப்படும்.

## 10. முடிவுறுத்துதல் மற்றும் அறவீடு செய்தல் - சட்டரீதியான ஏற்பாடுகள்

MBSLஇனால் இந்த வசதி முடிவுறுத்தப்படுமெனின், MBSLஇனால் இங்கு உள்ளடக்கப்பட்ட, முன்னர் இருந்த விதத்தில், விண்ணப்பதாரிக்கு/களுக்கு மற்றும்/அல்லது பிணையாளர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கும், முத்திரைக் கட்டணங்கள், சட்டரீதியான கட்டணங்கள் போன்றவை உள்ளிட்ட சட்டரீதியான நடவடிக்கைகளின்போது ஏற்கப்படுகின்ற அனைத்து செலவுகளுடன், MBSLஇற்கு நிலுவைத் தொகையை அறவிடுவதற்கான அனைத்துவித நடவடிக்கைகளையும் எடுக்கும் உரிமையுண்டு.

### 10.1 பொருந்தக்கூடிய சட்ட ஏற்பாடுகள்

i. 1946ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க திருத்தப்பட்ட ஈட்டுக் கடன் சட்டம்
ii. 1982ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க நுகர்வோர் கடன் சட்டம்
iii. ஒப்பந்த சட்டங்கள்
iv. இலங்கை சிவில் மற்றும் குற்றவியல் சட்டம்
v. 2009ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க பாதுகாப்பான பரிவர்த்தனைகள் சட்டம்
vi. 1998ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உறுதிப்பத்திரங்களைப் பதிவு செய்யும் சட்டம்
vii. 1995ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நடுவர் மன்ற சட்டம்
viii. 1988ஆம் ஆண்டின் 72ஆம் இலக்க மத்தியஸ்த சபை சட்டம்
ix. 1990ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டம்
x. 1990ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டுக்கள் சட்டம்
xi. 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டம்
xii. 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்

## 11. முறைப்பாடுகளை கையாளும் நடைமுறைகள்

எமது உற்பத்திகள் மற்றும் சேவைகள் தொடர்பில் வாடிக்கையாளர்கள் முறைப்பாடுகளை முன்வைக்கலாம்.

அ) அருகிலுள்ள கிளைக்குச் சென்று கிளை முகாமையாளரிடம் தமது முறைப்பாடுகளைச் செய்யலாம்.

ஆ) தொலைபேசியூடாக அல்லது கீழ்க்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் முறைப்பாடுகளை அனுப்பலாம். 011 - 4 711 711 **OR** via E-mail – info@mbslbank.com / customercare@mbslbank.com

இ) தபால் மூலம் உங்கள் முறைப்பாடுகளை அனுப்ப வேண்டிய முகவரி: பிரதிப் பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல் மற்றும் உற்பத்தி அபிவிருத்தி,

உதவிப் பொது முகாமையாளர் சந்தைப்படுத்தல் - தயாரிப்பு முகாமைத்துவம், வீடு மனை விற்பனை, வாடிக்கையாளர் முறைப்பாடுகளைக் கையாளல் மற்றும் ஆதரவுச் சேவைகள்
மேர்சன்ட் பேங்க் ஒ∴ப் ஸ்ரீலங்கா என்ட் ∴பைனான்ஸ் பீஎல்சீ
இல.28, இலங்கை வங்கி மேர்சன்ட் டவர்
சென்ட் மைக்கல்ஸ் வீதி, கொழும்பு 03.

**"சந்தேகத்திற்கிடமான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வரம்புக்கு மேலான கொடுக்கல் வாங்கல்கள்**